ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,743 — 1959 මැයි 15 වැනි සිකුරාදා — 15.5.1959**

11,743 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு வைகாசி மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (II) — விளம்பரங்கள்

## பதவி வெற்றிடம்

### இலங்கை இராணுவத்தில் நிரந்தரப் படையினர் நியமனம்

இலங்கை இராணுவத்தில் நிரந்தரப் படையில் சேர விரும்புவோரிடத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் கீழ்க்காணும் தகுதிகள் உடையவர்களாக இருக்க வேண்டும்.

2. **தகுதிகள்.**—(அ) விண்ணப்பக்காரர் நல்நடத்தை உடையவராக இருப்பதுடன், இலங்கையராய் இருக்க வேண்டும். (பரம்பரை இலங்கையரா ? பதிவு செய்யப்பட்ட இலங்கையரா என்று காட்டப்பட வேண்டும்).

(ஆ) 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ந் திகதி அன்று 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், 40 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

(இ) இவர்கள் ஆங்கிலம், தமிழ், சிங்களம் இவற்றில் ஏதாவது ஒரு மொழியில் 5 ம் வகுப்பு சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய தகுதிகளை உடையவர்களே மட்டும் இலங்கை இராணுவத்தில் சேர்க்கப்படும்.

(ஈ) இவர்கள் வைத்தியப் பரிசோதனை ஒன்றில் சேனைத் தளபதியின் திருப்திக்கேற்பச் சித்தியடைய வேண்டும் ; அத்துடன்,

(உ) 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாத உயரம் உடையவர்களாக இருக்க வேண்டும். படைத் தளபதி தன் விருப்பத்தின்படி புறநடையான தகுதிகள் உடையவர்களை அவர்கள் 40 வயதிற்கு மேல் இருந்தாலும், அல்லது 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைவான உயரம் உடையவர்களாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள முடியும்.

3. பழைய சேவைக் காலத்தை உடையவர்களுக்குச் சலுகை காட்டப்படும். அப்படிப் பட்டவர்கள் இரண்டாம் பந்தியில் கேட்கப்பட்டவைகளுடன் கீழ்க்காணுபவைகளையும் உடையவர்களாக இருந்தால்—

(அ) இவர்கள் பிரித்தானியச் சாம்ராச்சியப் படையுடன் இலங்கைப் பாதுகாப்புப் படையில் சேர இதில் குறைந்தது ஒரு வருட காலமாவது சேவை செய்தவர்களாக இருக்க வேண்டும்.

(ஆ) இவர்கள் இராணுவத்தில் இருந்து விலகியபொழுது இவர்கள் நடத்தை ஆகக் குறைந்தது, மிகவும் நல்லது என்றாவது தரம் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. **தேவையான விசேஷ தகுதிகள்.**—மேலே கேட்கப்பட்டிருக்கும் தகுதிகளுடன் கீழே குறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நியமனங்களுக்கும் எதிரே கூறப்பட்டிருக்கும் விசேஷ தகுதிகளையும் உடையவர்களுக்குச் சலுகை காட்டப்படும்.

| தொடர் இலக்கம் | கூறு | தரமும் நியமனமும் | விசேஷ தகுதிகள் |
|---|---|---|---|
| 1. | இலங்கைச் சேனை சேவைப் படை | சார்ஜன் (இலிகிதர்) | 1. 30 வயதிற்குட்பட்டவர்களாகவும்,<br>2. ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்தும்,<br>3. தட்டெழுத்து சுருக்கெழுத்தில் திறமை உள்ளவர்கள் பிரத்தியேகமாக சிங்களத்தில் தட்டெழுத்துத் தெரிந்தவர்களாகவும்,<br>4. கந்தோர்களில் வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். |
| | ஷ | கோப்ரல் (இலிகிதர்) | 1. 30 வயதிற்குட்பட்டவர்களாகவும்,<br>2. ஆங்கில கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்தும்,<br>3. நிமிடத்தில் 25–30 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாகவும், ஓரளவு சுருக்கெழுத்து அறிவு உடையவர்களாக இருப்பதுடன்,<br>4. கந்தோர்களில் வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். |
| 2. | இலங்கைச் சேனை பொது சேவைப் படை | சார்ஜன், கல்விப் போதனாசிரியர் மொழி பெயர்ப்பு வேலைகள் | பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றில் தகுதி உடையவராக இருக்க வேண்டும்—<br>1. பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியர்களாயின், ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடனும்,<br>2. சிங்கள ஆசிரிய தராதரப் பத்திரம் உடையவர்களாயின் ஆங்கில சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரத்துடனும்,<br>3. சிங்கள ஈ. சி. ஈ. அட்வான்ஸ் லெவல் தராதரப் பத்திரம் உடையவர்களாயின் ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடனும்,<br>4. ஆங்கில சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரமும், சிங்கள சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரமும் உடையவர்களாயின் கல்வி பயிற்றலிலாவது அல்லது மொழி பெயர்ப்பு வேலையிலாவது 2 வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.<br>பொது விஞ்ஞானமும், ஆரம்ப கணிதமும் சிங்களத்தில் கற்பிக்கக்கூடியவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். |

| தொடர் இலக்கம் | கூறு | தரமும் நியமனமும் | விசேஷ தகுதிகள் |
|---|---|---|---|
| | இலங்கைச் சேனை பொது சேவைப்படை .. | லான்ஸ் கோப்ரல் கைத்தொழில் போதனாசிரியர் | 1. கைத்தொழில் பயிற்சி நிலையம் ஒன்றில் ஏதாவது கைத்தொழில் வேலைகளில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.<br>2. பின்வருவனவற்றில் 3 தொழில் செய்யக் கூடியவர்களாகவும் போதிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.<br>(அ) தச்சு வேலை,<br>(ஆ) பிரம்பு வேலை,<br>(இ) தும்புத் தொழில்,<br>(ஈ) தோல் வேலை,<br>(உ) புத்தகம் கட்டும் வேலை.<br>ஆங்கிலம் தெரிந்திருத்தல் பிரத்தியேக தராதரமாகக் கணிக்கப்படும். |
| | ஷை .. | லான்ஸ் கோப்ரல் கமத்தொழில் மேற்பார்வையாளர் | 1. கனிஷ்ட பாடசாலைத் தராதர வகுப்பு சித்தியடைந்தவர்களாகவும்,<br>2. அரசாங்க பண்ணைப் பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றவராயும்,<br>3. பண்ணையிலோ அல்லது தோட்டத்திலோ தொழிலாளரை மேற்பார்வை செய்து அனுபவம் உடையவர்களாகவும்,<br>4. கால் நடைப் பிராணிகளைப் பராமரிப்பதில் அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். |
| | இலங்கைச் சேனை பொது சேவைப் படை .. | படையினர் இலிகிதர் (பொது வேலைகள்) | 1. ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரவகுப்புச் சித்தியடைந்தும்,<br>2. ஒரு நிமிடத்தில் சிங்களத்தில் 12 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாகவும்,<br>3. நிமிடத்தில் 60 சொற்கள் சுருக்கெழுத்து சிங்களத்தில் எழுதக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.<br>சிங்களத்தில் தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் தெரிந்திருத்தல் பிரத்தியேக தராதரமாகக் கணிக்கப்படும். |

**5.** தகுதியுடைய விண்ணப்பக்காரர்கள் 1956 ம் ஆண்டு 33 ம் இலக்க அரசாங்க மொழிக் கொள்கைச் சட்டத்திற்ிணங்கத் தெரிவு செய்யப்படுவர்.

**6.** 21 வயதிற்குட்பட்டவர்களை, அவர்களின் பெற்றோர்களோ, அல்லது பாதுகாவலர்களோ தங்கள் விருப்பத்தை எழுத்து மூலம் தெரிவித்தால் அன்றி சேர்த்துக்கொள்ள முடியாது.

**7. சேவைக்காலம்.**—முதல் சேவைக் காலம் 12 வருடங்களாகும். இவற்றில் 5 வருடங்கள் நிரந்தரப் படையிலும், மிகுதி 7 வருடங்கள் மேற்படையிலும் சேவை செய்யப்படலாம். அதன் பின் விரும்பினால் இராணுவத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம். அன்றித் தம்முடைய படைத் தலைவரின் ஆதரிப்பின் கீழ் ஒருவர் தம்முடைய இளைப்பாற்றிச் சம்பளத்திற்குரிய காலம் வரை நிரந்தரப் படையில் சேவையாற்றலாம்.

**8. சம்பளம் வாழ்க்கைப்படி பற்றிய விபரங்கள்.**—நிலையான சேனையில் படையினராக நியமிக்கப்பட்டவர்களின் சம்பளம், வாழ்க்கைப்படி பற்றிய விபரங்கள் பின்வருமாறு :—

(அ)

| | சம்பளம் | வாழ்க்கைப் படி | கூப்பன் படி | சலவைச் செலவு | விவாகப் படி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| படையினர் | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 46 50 .. | 27 90 .. | — .. | — .. | — .. | 74 40 |
| விவாகம் ஆனவர் .. | 46 50 .. | 27 90 .. | 79 67 .. | 3 99 .. | 25 00 .. | 183 06 |
| லான்ஸ் கோப்ரல் | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 62 00 .. | 43 40 .. | — .. | — .. | — .. | 105 40 |
| விவாகம் ஆனவர் .. | 62 00 .. | 43 40 .. | 79 67 .. | 3 99 .. | 25 00 .. | 214 06 |
| கோப்ரல் | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 93 00 .. | 49 60 .. | — .. | — .. | — .. | 142 60 |
| விவாகம் ஆனவர் .. | 93 00 .. | 49 60 .. | 79 67 .. | 3 99 .. | 25 00 .. | 251 26 |
| சார்ஜன் | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 147 25 .. | 49 60 .. | — .. | — .. | — .. | 196 85 |
| விவாகம் ஆனவர் .. | 147 25 .. | 49 60 .. | 79 67 .. | 3 99 .. | 37 50 .. | 318 01 |
| ஸ்ராப் சார்ஜன் | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 170 50 .. | 49 60 .. | — .. | — .. | — .. | 220 10 |
| விவாகம் ஆனவர் .. | 170 50 .. | 49 60 .. | 79 67 .. | 3 99 .. | 37 50 .. | 341 26 |
| வரண்ட் உத்தியோகஸ்தர் 2 | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 186 00 .. | 49 60 .. | — .. | — .. | — .. | 235 60 |
| விவாகம் ஆனவர் .. | 186 00 .. | 49 60 .. | 79 67 .. | 3 99 .. | 40 00 .. | 359 26 |
| வரண்ட் உத்தியோகஸ்தர் 1 | | | | | | |
| விவாகம் ஆகாதவர் .. | 217 00 .. | 49 60 .. | — .. | — .. | — .. | 266 60 |
| விவாகம் ஆனவர் .. | 217 00 .. | 49 60 .. | 79 67 .. | 3 99 .. | 40 00 .. | 390 26 |

(ஆ) விவாகம் ஆகாதவர்கள் சேனைக் கட்டிடத்தில் குழுவினர் கூட்டத்தில் வாசம் செய்வார்களேயானால் அவர்களுக்கு கூப்பன் சேலவு, சலவைச் செலவு ஆகியவைகள் கொடுக்கப்படமாட்டாது.

9. **விண்ணப்பப் பத்திரங்கள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையின் அடியில் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தைப் பார்த்து தங்கள் சொந்தக் கையெழுத்தில் தயார்செய்து அனுப்ப வேண்டும். அச்சிட்டோ, அல்லது தட்டை எழுத்தாலோ அனுப்பப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. விண்ணப்பப் பத்திரங்களை படைக்கு ஆள் சேர்க்கும் காரியாலய அதிபர், சேனைத் தலை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் தபால் உறையின் மேல் நிரந்தரப் படையில் சேரும் விண்ணப்பம் என்று எழுதப்படல் வேண்டும்.

11. விண்ணப்பக்காரர் எந்தப் பிரிவில் சேர விரும்புகிறார் என்பதை, கூறு, நியமனம் ஆகியவைகளைக் கவனித்து விண்ணப்பிக்க வேண்டும்.

12. விண்ணப்பப் பத்திரங்கள் 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ந் திகதி, அன்று அல்லது அதற்கு முன் இக்காரியாலயத்தில் இருக்கும் படியாக அனுப்ப வேண்டும்.

13. விண்ணப்பப் பத்திரத்தில் உள்ளபடி தகுதிகள் அற்றவர்களின் விண்ணப்பங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவைகள் நிராகரிக்கப்படும்.

14. அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களைக் காரியாலயத்து அதிகாரிக்கூடாக அனுப்ப வேண்டும்.

15. பின்வருவனவற்றின் மாதிரிப் பத்திரங்கள் மாத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் ;

(ஆ) கூடுதலான கல்வித் தகுதியைக் காட்டும் சான்றுப் பத்திரம் ;

(இ) விண்ணப்பக்காரரின் நன்நடத்தையையும், தகுதியையும், தகைமையையும் பற்றிய 3 தற்போதைய சான்றுப் பத்திரங்கள். விண்ணப்பக்காரர் ஏற்கனவே தொழிலில் இருப்பவரானால் இவற்றில் ஒன்று தம்முடைய நேர் அதிகாரியிடம் இருந்து பெற்றதாய் இருக்க வேண்டும்.

மேலே குறிக்கப்பட்டிருக்கும் பத்திரங்களுடன் (பிரதிகள் மாத்திரம்) சேர்ந்து வராத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இப்பத்திரங்களின் உண்மைப் பிரதிகள் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் விண்ணப்பக்காரரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தால் அப்பொழுது அவைகள் காட்டப்பட வேண்டும்.

16. நேர்முகப் பரீட்சைக்குரிய திகதி, இடம், நேரம் ஆகியவைகள் பிற்பாடு அறிவிக்கப்படும். விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு வருவதற்குச் செலவு கொடுக்கப்படமாட்டாது. அவர்கள் தம் சொந்தச் செலவிலேயே வந்து ஓர் இராணுவ தெரிவுக் குழுவின் முன் ஆஜராக வேண்டும்.

17. நேர்முகப் பரீட்சையும் அத்துடன் கூடிய மற்றைய பரீட்சைகளும் முடிந்த பின்னர் ஒவ்வொரு விண்ணப்பக்காரருக்கும் அவர்களை நியமனத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் நியமனத்திற்குரிய திகதி, இடம் முதலியவைகளைப்பற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும்.

18. ஒரு விண்ணப்பக்காரரை யாராவது அங்கீகாரம் செய்ய விரும்பினால் அவருக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்து உதவலாம். அப்படியல்லாது அவரை ஆதரிக்கவோ அல்லது பிரசாரம் செய்யவோ எத்தனித்தால் குறித்த விண்ணப்பக்காரரின் மனுத் தள்ளுபடி ஆவதற்குக் காரணமாய் இருந்தவர்களாவார்கள்.

19. சரியானவை என்று தெரிவு செய்யப்பட்டவை தெரிவின் பின் பிழையானவை என்று காணப்படின் அவைகள் எந்நேரத்திலும் தள்ளுபடி செய்யப்படலாம்.

கே. ராஜயோகம்,
மேஜர்,
படைத் தளபதிக்காக.

கொழும்பு,
7.5.59.

**விண்ணப்பப் பத்திரம்**

(ஒவ்வொருவரும் சொந்தக் கையெழுத்தில் எழுதி அனுப்ப வேண்டும்)

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
   கந்தோர் விலாசம் : ————.
3. பிறந்த திகதி : ————.
   (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி அனுப்பப்பட வேண்டும்)
4. சேர விரும்பும் பிரிவு : ————.
5. முதல் இராணுவத்தில் சேவை செய்திருந்தால் பிரிவும், காலமும் : ————.
6. இராணுவ சேவையைப் பற்றிய பூரண விபரம் தருக : ————.
   (யுத்தகால சேவையுட்பட பிரிவும் திகதியும்)
7. இராணுவத்தில் இருந்து விலகியதா ? அல்லது விலக்கப் பட்டவரா ? : ————.
   (சான்றுப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
8. சித்தியடைந்துள்ள ஆகக் கூடிய வகுப்பு : ————.
   (பாடசாலை விடுகைப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
9. விண்ணப்பப் பத்திரத்தின்படி நீர் கூடுதலான தகுதியுடைய பிரிவில் சேர விரும்பினால், விசேஷ தகுதி, அனுபவம் ஆகியவற்றைக் காட்டுக : ————.
10. தற்போதைய தொழில் : ————.
11. உயரம் : ———— அடி ———— அங்குலம்.
12. சான்றுப் பத்திரங்கள்—
    1.————.
    2.————.
    3.————.

————————
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

## வித்தியா பகுதி

### அரசினர் பாடசாலைகளில் உடற்பயிற்சிப் போதனாசிரியர் களுக்கான பதவிகள்

இலங்கையரான ஆண்கள், பெண்களிடமிருந்து அரசினர் பாடசாலைகளில் உடற்பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் பத்திர முறையில் தயாரிக்கப்பட்டு "வித்தியாதிபதி (GE கிளை) வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1959 ம் ஆண்டு யூன் மாதம் 1 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விண்ணப்பம்—உடற்பயிற்சிப் போதனாசிரியர்" எனக் குறிப்பிடப்படவேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் பணங்களும்.**—விதிகளுக்கமைய சகாயப் பணங்களோடு சம்பள விகிதம் ரூ. 1,560–14 × 72–2,568 (திறமைத்தடை) ரூ. 2,640–5 × 120–3,240. திறமைத்தடைக்கு மேற்செல்முன் உத்தியோகத்தர்,

(அ) சுயமொழியிற் தேர்ச்சி பெறவேண்டும். அதாவது, உடற்பயிற்சி வகுப்பு ஒன்றினை அல்லது உடற்பயிற்சிக் கல்வி சம்பந்தமான வகுப்பு ஒன்றினை சிங்களத்தில்/தமிழில் நடத்த ஆற்றல்,

(ஆ) வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உடற்பயிற்சிக் கல்லூரியில் ஆகக் குறைந்தது ஒரு வருடப் பயிற்சித் தராதரப் பத்திரமும் பெற வேண்டும்.

வித்தியா பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்ட இருப்பிடவசதியோடு கூடிய இரண்டு பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி அதனைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்ததற்கான பத்திரங்களைப் பெற வேண்டும்.

(இ) வித்தியா பகுதியால் நடாத்தப்படும் உடற்பயிற்சிப் பரீட்சை ஒன்றில் சாத்திர முறையிலும் செயல் முறையிலும் பரிசோதகர்களைத் திருப்திப்படுத்த வேண்டும்.

3. **நியமன நியதிகள்**—

(i) பதவிகள் நிரந்தரமானவை ;

(ii) தெரியப்படும் விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட தராதரமுடையோராயின், தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யின் இளைப்பாற்றிச் சம்பள உரிமையுடைய பதவி வகிப்பவராகக் கருதப்படுவர். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கும் ஆசிரியர் கைம்பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் அவர் கட்டணம் செலுத்த வேண்டும் ;

(iii) நியமிக்கப்படுபவர்கள் ஏற்கனவே இளைப்பாற்றிச் சம்பள உரித்துடைய நிரந்தர அரசினர் சேவையில் இல்லாதோராயின் 3 வருடகாலத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவர் ;

(iv) அரசினரின் கீழ் இளைப்பாற்றிச் சம்பள உரித்துடைய பதவிகளை வகிப்போர் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குப் பதில் பதவி வகிப்போராக நியமிக்கப்படுவர் ;

(v) நியமிக்கப்படுவோர் ஒரு பாடசாலைக்கு நியமிக்கப்படினும் அவ் வட்டாரத்திலுள்ள வேறு பாடசாலைகளிலும் கடமை புரியும்படி கேட்கப்படக்கூடும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கான சான்றுகளைக் காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியன்று 20 க்குக் குறையாமலும் 30 க்கு மேற்படாமலுமுள்ள வயதுடையவராயிருக்க வேண்டும். வயதுச் சலுகை கோருவோர் தமது யுத்தகாலச் சேவைபற்றித் தக்க சான்று காட்ட வேண்டும் ;

ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளோர் மேற்போந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதில்லை ;

(ii) ஆங்கிலம்/சிங்களம்/தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான அல்லது மேலான தராதரப் பத்திரம் உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) (அ) வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட உடற்பயிற்சிக் கல்லூரி ஒன்றில் குறைந்தது ஒரு வருட பயிற்சி பெற்று உடற்பயிற்சித் தராதரப் பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

(ஆ) இராணுவ உடற்பயிற்சிப் பாடசாலை ஒன்றில் பயிற்சி பெற்று திருப்திகரமான தரத்தை அடைந்திருத்தல் வேண்டும்

அல்லது

(இ) வித்தியா பகுதியால் ஒழுங்கு செய்யப்பட்ட இருப்பிட வசதியோடு கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி பயிற்சியைத் திருப்திகரமாய்ப் பூர்த்திசெய்து தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) விளையாட்டுகளில் மிகச் சிறந்த வெற்றிகள் ஈட்டியிருத்தலுடன் உடற்பயிற்சி ஆசிரியராக குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) சிங்கள/தமிழ் மொழியில் நல்ல அறிவு பெற்றிருத்தல் வேண்டும் ;

(v) நன்னடத்தை உடையவராயும் சுகதேகியாயும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளையல்ல) சேர்த்தனுப்பவேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பத்திரம் ஏற்கப்பட மாட்டா),

(ஆ) கல்வித் தராதரத்துக்கும் தொழில் தராதரத்துக்கும் அத்தாட்சியான பத்திரங்கள்,

(இ) சிங்களத்தில்/தமிழில் பெற்றிருக்கும் தேர்ச்சிக்கு அத்தாட்சியான பத்திரங்கள்,

(ஈ) தராதரம், நடத்தை, இப்பதவிக்குரிய தகுதி என்பனபற்றிக குறிக்கும் அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (அரசினர் சேவையிலுள்ளவர்கள் இவற்றை அனுப்பவேண்டியதில்லை).

குறிப்பு.—(1) நற்சாட்சிப் பத்திரங்கள், தராதரப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

(2) அரசினர் சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் நன்னடத்தைப் பத்திரங்கள் மட்டுமே அனுப்பவேண்டியதில்லை.

6. (அ) உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறாத பாடசாலைகளில் இருந்து விண்ணப்பஞ் செய்வோரின் விண்ணப்பங்கள் பாடசாலை முகாமைக்காரர் மூலம் அனுப்பப்படவேண்டும். அத்தகைய ஆசிரியர்களை சேவையிலிருந்து விலகவிட முடியுமென முகாமைக்காரர் எழுத்து மூலம் அறிவித்தாலன்றி அவர்களின் விண்ணப்பங்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(ஆ) பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெறப்படின், அவைகள் உரிய காலத்தில் பகுதித் தலைவர்களால் பெறப்பட்டனவாய், தாமதத்துக்குக் காரணம் காட்டி ஏற்கும்படி சிபார்சு செய்யப்பட்டாலன்றி அவைகள் ஏற்கப்படமாட்டா.

7. அரசினர் "கசெற்" பத்திரிகையின் 1 ம் பகுதி 2 ம் பிரிவில் முற்பகுதியில் கொடுபட்டுள்ள பகிரங்க சேவை நியமனங்கள் பற்றிய நிபந்தனைகளைக் கவனிக்கவும். இவ்விளம்பரத்தில் கொடுபட்டுள்ள நிபந்தனைகளுடன் அவையும் ஏற்புடையன.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான எவ்வித கடிதங்களும் இப்பகுதியின் GE கிளைக்கே அனுப்பப்படவேண்டும். எவ்வுத்தியோகத்தர் பெயருக்கும் அல்ல. அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் கிடையா. எனவே விண்ணப்பப் பத்திரங்கள் கோரி எழுதப்படும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் பத்திரத்தை விண்ணப்பதாரிகள் பிரதி செய்யவேண்டும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்தல் பற்றி அறிவிக்கப்படமாட்டாது. சாதாரண தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பெறப்படாமைக்கு இப்பகுதி பொறுப்புடையதாகாது.

10. இவ் விளம்பரத்தின் தேவைகளை எல்லா வகையிலும் சரியாக அனுசரித்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். எப். டி. சில்வா,
வித்தியாதிபதி.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ௵ மே மீ 12 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### உடற்பயிற்சிப் போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (திரு/திருமதி/செல்வி) : ————.

2. விலாசம் : ————.

3. பிறந்த திகதியும் இடமும் : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்)
வயது : ————.

4. பிறந்த இடம்—
(அ) விண்ணப்பகாரரின் தகப்பன் : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
(இ) விண்ணப்பகாரரின் தகப்பன்வழிக் கொப்பாட்டன் : ————

5. (அ) விண்ணப்பகாரரின் சாதியம் : ————.

(ஆ) இலங்கையராயின், பிரசாவுரிமைப் பதிவாலா வம்சா வழியாலா ————

6. தற்போதைய உத்தியோகம் (ஏதுமிருப்பின்) சேவை விபரக் குறிப்புகளுடன் : ————.

(ஆசிரியராயின் பதிவு இலக்கம், தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள விகிதம் ஆகியவை கொடுபடவேண்டும்)

7. ஆகக்கூடிய தாரதரம்—
(அ) சிங்களம்/தமிழ் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.

8. உடற்பயிற்சிக் கல்வி தொடர்பான தராதரங்கள் : ————. (பயிற்சிக் காலம், இடம், தராதரப் பத்திர வகுப்பு. இவை சான்றுப் பத்திரங்களால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்)

9. உடற்பயிற்சிக் கல்வியிலுள்ள விசேட தகுதிகள், அனுபவங்கள், விசேட உரிமைகள் ஆதியன : ————.

10. கல்வி பயின்றது எங்கே ? பாடவேலைக்குப் புறம்பான முயற்சிகளில் விண்ணப்பகாரன் பங்குபற்றி இருப்பின் அவைபற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக : ————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் விலாசங்களும் : ————.

..........................................
விண்ணப்பகாரர் கையொப்பம்.

திகதி : ————.

---

## சுதேச வைத்தியப் பகுதி

### சுதேச வைத்தியர்—வெளிமருந்துச்சாலை—சுதேச வைத்திய ஆசுப்பத்திரி

அரசாங்க சுதேச வைத்திய ஆசுப்பத்திரி வெளிமருந்துச்சாலையில் சித்த வைத்தியர் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் சுதேச வைத்திய அபிவிருத்தி அதிகாரி, கொழும்பு 8, என்ற விலாசத்துக்கு 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

3. **சம்பளம்.**—இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் ரூபா 2,100—120—180—4,080. வருடமொன்றுக்கு ரூபா 2,760 க்கு முன்னதாக தகுதிப் பரீட்சை.

4. **பதவி நியமன விதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் உடையதும் ஆகும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

5. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் :—

அ) இலங்கையிலோ, இந்தியாவிலே அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளாயும், பட்டம் பெற்றதற்குப்பின் 5 வருடத்துக்கு குறையாத வைத்திய அனுபவம் உள்ளவராகவும்,

(ஆ) நல்லொழுக்கமும், தேகசுகமுடையவராகவும்,

(இ) 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ம் திகதியில் 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர் தம் மனுக்களுடன் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கல்வித்தன்மை, தொழில்த் தகைமை அதி உயர் சான்றிதழ்கள்,

(இ) சமீபத்திய குணநலச்சான்றிதழ்கள் இரண்டு ஆதியனவற்றின் பிரதிகளைமட்டும் (மூலங்களையன்றி) இணைத்து அனுப்புதல் வேண்டும் (இந்த உட் பிரிவின்கீழ் அரசாங்க சேவையில் இருப்பவர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் இணைக்கத் தேவையில்லை).

மேற்குறிப்பிட்ட பிரதிகள் விண்ணப்பதாரிக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா.

7. இந்த வர்த்தமானியின் பகுதி I, தொகுதி II ன் ஆரம்பத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ள பகிரங்க சேவை நியமனங்களுக்குரிய பொது விதிகளையும் அவதானத்துக்கு எடுத்துக்கொள்க.

டபிள்யு. ஜே. ஏ. வான் லாங்கன்பேக்,
சுதேச வைத்திய அபிவிருத்தி அதிகாரி.

சுதேச வைத்தியப் பகுதி,
கொழும்பு 8,
1959 ம் ஆண்டு ஏப்ரில் மீ 30 ந் உ.

---

## சுதேச வைத்தியப் பகுதி

### சுதேச வைத்திய பாடங்களில் சித்த வைத்திய விரிவுரையாளர்—சுதேச வைத்தியக் கல்லூரி

அரசாங்க சுதேச வைத்தியக் கல்லூரி கொழும்பு 8 ல் சுதேச வைத்தியப் பாடங்களில் சித்தவைத்திய விரிவுரையாளர்ப் பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் சுதேச வைத்திய அபிவிருத்தி அதிகாரி, கொழும்பு 8 என்ற விசாலத்துக்கு 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

3. **சம்பளம்.**—இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் ரூபா 3,180—6 × 120—5 × 180—4,800 வருட மொன்றுக்கு ரூபா 3,960 முன்னதாக தகுதிப் பரீட்சை.

4. **பதவி நியமன விதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் உடையதும் ஆகும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர்.

5. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,—

(அ) இலங்கையிலோ இந்தியாவிலோ அங்கீகரிக்கப்பட்ட சுதேச வைத்தியக் கல்லூரிகளால் அளிக்கப்பட்ட பட்டதாரிகளாயும், போதனையை நடத்துவதற்கு தகுதி வாய்ந்த ஞானமுடையவராயும்,

(ஆ) நல்லொழுக்கமும், தேகசுகமுடையவராயும்,

(இ) 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ம் திகதியில் 25 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரர் தம் மனுக்களுடன் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கல்வித்தகைமை, தொழில்த் தகைமை அதி உயர் சான்றிதழ்கள்,

(இ) சமீபத்திய குணநலச்சான்றிதழ்கள் இரண்டு ஆதியனவற்றின் பிரதிகளைமட்டும் (மூலங்களையன்றி) இணைத்து அனுப்புதல் வேண்டும் (இந்த உட்பிரிவின் கீழ் அரசாங்க சேவையில் இருப்பவர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் இணைக்கப்படத் தேவையில்லை).

மேற்குறிப்பிட்ட பிரதிகள் விண்ணப்பதாரிக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா.

7. இந்த வர்த்தமானியின் பகுதி I, தொகுதி II ன் ஆரம்பத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ள பகிரங்க சேவை நியமனங்களுக்குரிய பொது விதிகளையும் அவதானத்துக்கு எடுத்துக்கொள்க.

டபிள்யு. ஜே. ஏ. வான் லாங்கன்பேக்,
சுதேச வைத்திய அபிவிருத்தி அதிகாரி.

சுதேச வைத்தியப் பகுதி,
கொழும்பு 8,
1959 ம் ஆண்டு ஏப்ரில் மீ 30 ந் உ.

---

## சுதேச வைத்தியப் பகுதி

### சுதேச வைத்திய ஆரோக்கிய சாலைக்குத் தாதிமார் நியமனம்

கொழும்பு கொட்டா ரோட்டிலுள்ள அரசினர் சுதேச வைத்திய ஆரோக்கியசாலைக்கு பயிற்றப்பட்டதும், பயிற்றப்படாததுமான பெண் தாதிமார்களை நியமனஞ் செய்வதற்காக வேண்டிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் இக்கந்தோருக்கு 1959 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதி, நடுப்பகல் 12 மணிக்கு முன்னர் வந்து சேரக் கூடியதாய் அனுப்பி வைத்தல் வேண்டும்.

அவ்வகை விண்ணப்பங்கள் கீழ்த்தரப்படும் பிரதியின்படியேயிருத்தல் வேண்டும்.

3. **சம்பள விபரம்—**

**(1) பயிற்றப்பட்ட தாதிமார்கள்**

வருடமொன்றுக்கு ரூபா 1,824—72—2,904.

மேலும் வாழ்க்கைப்படியுடன், வருடமொன்றுக்கு சலவைச் செலவு ரூபா 60.00 ம், சப்பாத்துச் செலவு ரூபா 20.00 ம் சேர்த்துக் கொடுபடும்.

அரசாங்க வீடுகளில் வசிக்காவிட்டால் வீட்டு வாடகையுஞ் சேர்த்துக் கொடுபடும்.

**(2) பயிற்றப்படாத தாதிமார்கள்**

வருடமொன்றுக்கு ரூபா 1,338—42—1,842.

மேலும் வாழ்க்கைப்படியுடன், வருடமொன்றுக்கு சலவைச் செலவு ரூபா 60 ம் சப்பாத்துச் செலவு ரூபா 20.00 ம் சேர்த்துக் கொடுபடும்.

அரசாங்க வீடுகளில் வசிக்காவிட்டால் வீட்டு வாடகையுஞ் சேர்த்துக் கொடுபடும்.

**4. தேவையான தராதரங்கள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும், கீழ்வரும் தராதரங்களுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

**(1) பயிற்றப்பட்ட தாதிமார்கள்**

(அ) 1959 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாயும், 35 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1949 ம் ஆண்டு 10 ம் இலக்க வைத்திய (திருத்தச்) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட, பயிற்றப்பட்ட தாதியாயிருத்தல் வேண்டும். தாதிமார்களின் பாண்டித்திய தராதரப் பத்திரத்துடன், மருத்துவத் தராதரப் பத்திரம் உடைய விண்ணப்பதாரிகள் அதிகமாய் விரும்பப்படுவார்கள்.

**(2) பயிற்றப்படாத தாதிமார்கள்**

(அ) 1959 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாயும், 30 வயதுக்கு மேற்படாதவர்களாயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) குறைந்தது கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் தேறியவராயிருத்தல் வேண்டும்.

(இ) வைத்தியப் பகுதியினரால் அளிக்கப்பட்ட உதவித் தாதிமார்களுக்குரிய தராதரப்பத்திரம் உடையவராயிருத்தல் வேண்டும் ; அன்றேல் அரசாங்க அல்லது பிரத்தியேக ஆரோக்கியசாலைகளில் தாதிவேலையில் கடமையாற்றி அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

**5. சேவையின் நிபந்தனைகள்**

(அ) நியமனம் நிரந்தரமானது ;

(ஆ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் குறைந்தகால அறிவித்தலுடன் சேவையிற் சேர்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள், தங்களுடைய விண்ணப்பங்களுடன், தராதரப் பத்திரங்களின் பிரதிகள் மட்டுமே அனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புக் கொப்பி ;

(ஆ) குணங்களைப் பற்றி தற்பொழுது பெற்ற 3 தராதரப் பத்திரங்கள்.

7. எல்லா விண்ணப்பங்களும், சுதேச வைத்திய அபிவிருத்தி அதிகாரி, சுதேச வைத்தியப் பகுதி, கொழும்பு 8, என்ற விலாசத்துக்கே அனுப்புதல் வேண்டும். இப்பகுதிக் கந்தோரிலுள்ள எவ்வகை அதிகாரியின் பெயருக்கும் விலாசமிட்டு விண்ணப்பங்கள் அனுப்புதல் கூடாது.

8. பொது அரசாங்க சேவை விதிகள், இவ்வரசாங்க வெளியீட்டின் முன்பகுதியில் பகுதி 1, பிரிவு 2 ல் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அதைப் பார்வையிடவும்.

டபிள்யு. ஜே. எ. வான்லாங்கென்பேர்க்,
சுதேச வைத்திய அபிவிருத்தி அதிகாரி.

சுதேச வைத்தியப் பகுதி,
கொழும்பு 8,
11.5.59.

**மேலே குறிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி**

1. முழுப் பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. பிறந்த வருடம், திகதி : ————.
   (பிறப்புக் கொப்பியின் பிரதி அனுப்பிவைத்தல் வேண்டும்)
4. சமூகம் : ————.
5. விவாகமாகியவரா அல்லது அல்லவா : ————.
   விவாகமாகியவராயிருந்தால்—
   (அ) விவாகமாவதற்குமுன்பிருந்த பெயர் : ————.
   (ஆ) கணவர் இருக்கின்றாரா : ————.
   (1) கணவருடன் சீவிக்கின்றீரா : ————.
   (2) கோட் மூலம் விவாகரத்துச் செய்து கொண்டீரா : ————
   (3) வேறு விதமாக விவாகரத்துச் செய்துகொண்டீரா : ————.
   (4) கணவரின் தொழில் : ————.
   (5) கணவர் தொழில் புரியும் இடம் : ————.
   (6) குழந்தைகளின் எண்ணிக்கை : ————.
   மூத்தபிள்ளையின் வயது : ————.
   கடசிப்பிள்ளையின் வயது : ————.
6. தற்பொழுது வேலையிலிருந்தால்—
   (அ) வேலை செய்யும் இடம் : ————.
   (ஆ) பணியாற்றிய கால அளவு : ————.
7. எவ்விடத்திற் கல்வி பயின்றீர் : ————.
   தேறிய பரீட்சைகள் : ————.
8. எவ்விடத்திற் தாதியாகப் பயிற்றப்பட்டீர் : ————.
   தாதியாகப் பரீட்சையிற் தேறிய திகதி : ————.
   (தராதரப் பத்திரத்தின் பிரதி அனுப்பிவைக்கவும்)
9. மருத்துவப் பயிற்சி யடைந்திருக்கிறீரா : ————.
   (தராதரப் பத்திரப் பிரதி அனுப்பிவைக்கவும்)
10. குணங்களைப்பற்றி தற்பொழுது பெற்ற 3 தராதரப்பத்திரங்களின் பிரதிகள் அனுப்பி வைக்கவும்.
11. தகப்பனுரின் அல்லது பாதுபாப்பாளரின் பெயர், விலாசம் : ————.
12. கீழ்வரும் மொழிகளிலுள்ள அறிவு—

| | வாசிக்க | எழுத | பேச |
|---|---|---|---|
| ஆங்கிலம் | .. | .. | .. |
| சிங்களம் | .. | .. | .. |
| தமிழ் | .. | .. | .. |

13. இதற்குமுன் அரசாங்க சேவையிலிருந்தால் அவ்வாறிருந்த காலங்களைத் திகதியுடன் தெரிவுக்கவும் : ————.
14. தாதியாகக் கடமையாற்றப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றீரா : ————
    (பதிவுப் பத்திரத்தின் பிரதி அனுப்பி வைக்கவும்)
15. அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியோ அல்லது தராதரக் குறைவினால் நீக்கப்படவில்லை என்பதை அறிவிப்பதுடன், நான் வேறு எவ்வகை ஆரோக்கியசாலைகளிலிருந்தோ அல்லது நிலையங்களிலிருந்தோ அல்லது மேற்கூறிய காரணங்களுக்காக நீக்கப்படவில்லையென்றும், வேறு எவ்வகையாகவும் கோட்டில் குற்றஞ்சாட்டப்படவில்லையென்பதையும் அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொய்ப் பிரமாணம் செய்தால் வரும் தண்டனை என்ன வென்பதையும் நான் அறிவேன்.

.................................
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

---

## பரீட்சையும் பரீட்சைப் பெ...

### ஹ்ரேயல் கல்லூரி

**பிரவேசப் பரீட்சை**

1. பல்கலைக் கழகப் புதுமுக முதல் வருட ... (Arts) யிலுள்ள சில இடங்களை நிரப்ப... கல்லூரியிலே 1959, யூன் மாதம் 6 ஆம் திகதி ஒ...

விஞ்ஞானப் பகுதியில் இடமில்லை.

2. கலைப் பகுதியில் சேரவிரும்பும் மாணவர்கள் ... மேற்படாத வயதையுடையவர்களாயும் பல்கலைக்க... கான பரீட்சையை 1960 இல் எடுப்பதற்குரிய த... பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி... வேண்டும்.

(i) பல்கலைக் கழகத்திலே கீழைத்தேச மொ... பகுதியிலும் சேர்வதற்குக் குறைந்தது... யான சித்தியும் (Credit Pass) ஆறு... மடைந்திருத்தல் வேண்டும். ஆறு ... அல்லது தமிழ், கணக்கு அல்லது வ... கணிதம் அல்லது தூய கணிதம் ஆகி... தல் வேண்டும்.

(ii) சட்டப் பகுதியில் சேர்வதற்கு மேலே (1... லற்றீன் பாடத்திலும் சித்தியெய்தியிருத்தல்

3. பின்வரும் பாடங்களைப் பயில விரும்பும் ... இடமுண்டு. சிங்களம்/தமிழ் ; ஆங்கிலம் ; பாளி (சி... சமஸ்கிருதம் (சிங்கள மொழி மூலம்) ; லற்றி... தமிழ், ஆங்கில மொழி மூலம்) ; கிறீக்/பூமிசாத்... மூலமும் தமிழ் மொழி மூலமும்) ; இந்திய சரி... மூலம்)/இலங்கைச் சரித்திரம் (சிங்கள, தமிழ், ஆ... ஐரோப்பிய சரித்திரம் (சிங்கள, தமிழ், ஆங்கில மொ...

4. விண்ணப்பங்கள் 1959, மே மாதம் 30 ஆம் ... அல்லது அதற்கு முன்பாகவோ ஹ்ரேயல் கல்லூ... வேண்டும். அதற்குரிய மனுப் பத்திரங்கள் ஹ்ரேயல்... ரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டட்லி கே...

ஹ்ரே...

கொழும்பு,
1959, மே 12,

## பேராதனை கமத்தொழிற் பாடசாலை

### இறுதிப் பரீட்சை முடிவுகள்—1959

முதலாம் பிரிவு :

பி. எம். ஐ. ஆர். முல்லிரியவா.

இரண்டாம் பிரிவு :

ஈ. எம். எச். டி. சில்வா, ரி. கனகசபை, என். டபிள்யூ. ஜயசூரிய, எல். பி. மைக்கேல், எல். எச். எஸ். பெரேரா, எம்.எஸ். எம். மார்சூக், சகோ. மைக்கேல் றெபேட், சகோ. பிலிப் ஒவ் ஜேசஸ்.

சாதாரண சித்தி பிரிவு :

சி. சி. உடமுல்ல, எஸ். நடராசா, எம். கந்தசாமி, டி. டி. வனசிங்க, என். பி. வரக்கஉல்ல, எம். புலுமுல்ல, எவ். ஆர். விஜேசிங்க, ரி. ஏ. தம்பியப்பா, ரி. எம். பொன்சேக, ரி. எம். பியரத்தின, பி. ஏ. விஜேசேகரா, எஸ். பி. றேக்காவ, பி. வி. குணசேகரா, எஸ். வி. ஈ. பெர்னுண்டோ, சி. நில்லிகொட, எஸ். ஜயவர்ண, என். பி. வீரசூரிய, டபிள்யூ. டி. டபிள்யூ. ஜயவர்த்தன, ஒ. எம். கே. ஆனந்த, எல். எல். ஆரியதாசா, வி. சீவரத்தினம், ஜி. கே. திப்பொட்டுமுனுவா, ஏ. எல். டி. பிரேமவர்த்தன, டி. பி. டி. அல்விஸ்.

பாடக்குறை :

பழ்வகைச் செய்கையில்—டபிள்யூ. டபிள்யூ. சோமரத்தின.
கமத்தொழிலில்—ஏ. எம். ஜமால்தீன்.
கமத்தொழிலில்—ஜே. எம். பி. ஹெரத்.
தாவரவியலில்—ஆர். சீனித்தம்பி.
தாவரவியலில்—ஜே. பி. ஹெரத்.
இரசாயனவியலில்—எஸ். நாகேஸ்வரன்.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

அரசாங்க சுதேச ... ந் தொழிற் பகுதி
வைத்தியர் பதவி ... ட்டுக்கரத்தை, புளிமாம்பழம் கொடுப்பதற்கு
... ள்விப் பத்திரங்கள்

2. விண்ணப்ப... கொழும்பு 8, எ... ழிற் பகுதியின் கோரிக்கைச் சபைத் தலைவர் 1959, திகதி அன்று அ... தி, வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரையும் அனுப்பிவைக்க வே... சினர் தோட்டங்களுக்கு கீழ் குறிக்கப்பட்ட தேள்வை ... டங்களில் கொண்டுபோய் கொடுப்பதற்கு

3. சம்பளம்.—இட ... கொள்ளுவார்.
120—180—4,080. ...
தகுதிப் பரீட்சை.

... தோட்டம்—
(1) தென்னைக்கிடுகு (சோடி) 35,000
(2) சுடப்பட்ட செங்கல் கட்டிட வேலைக்கு 30,000 பருமன் (அளவு) : $8\frac{3}{4}'' \times 4\frac{1}{2}'' \times 2\frac{3}{4}''$
(3) யாழ்ப்பாண இரட்டைமாட்டுக் கரத்தைகள் 2.
(4) புளி மாம்பழம் 4,000.

4. பதவி நியமன ...
பாற்றுச் சம்பளம் உ...
மூன்று வருட காலத்...

5. தேவையான த...
அ) இலங்கையிலோ,
களாயும், பட்...
வைத்திய அ...

... தோட்டம்—
(1) தென்னைக்கிடுகு (சோடி) 23,000
(2) சுடப்பட்ட செங்கல் கட்டிட வேலைக்கு 30,000 பருமன் (அளவு) : $8\frac{3}{4}'' \times 4\frac{1}{2}'' \times 2\frac{3}{4}''$
(3) யாழ்ப்பாண இரட்டைமாட்டுக் கரத்தைகள் 1.
(4) புளி மாம்பழம் 3,000.

(ஆ) நல்லொழுக்கமு...
(இ) 1959 ம் ஆண்...
குறையாதவர...
வேண்டும்.

6. விண்ணப்பதாரர்...
(அ) பிறப்புச் சான்றி...
(ஆ) கல்வித்தன்மை... வொன்றும் நீளம் 6 அடிக்குக்குறைவில்லாமலும்
(இ) சமீபத்திய கு... திற்குக் குறைவில்லாமலும் இருக்க வேண்டும்.
பிரதிகளைமட்டு... டுத்த திகதியிலிருந்து நான்கு வாரத்திற்குள்
வேண்டும் (...
இருப்பவர்க... மாட்டுக்கரத்தைகள் மட்டக்களப்பு கமத்தொழிற்
யில்லை). ... அளவு விபரப்படி செய்யவேண்டும். கறடியனுறுத்

மேற்குறிப்பிட்ட பிர... வையான இரண்டு கரத்தைகளும் உத்தரவு
மாட்டா. ... ந்து இரண்டு மாதத்திற்குள் செய்து கொடுக்க
... றைத் தோட்டத்திற்கு தேள்வையான கரத்தை

7. இந்த வர்த்தமா... ஒருமாதத்திற்குள் செய்து கொடுக்க வேண்டும்.
திலே பிரசுரிக்கப்பட்... வுகொடுத்த நான்கு வாரத்திற்குள் கொடுபட
விதிகளையும் அவதா... ாம்பழங்கள் நன்ருய் முற்றிய பழங்களாயும்,
... டாததுமாய், பருப்பெடுத்து நாட்டக்கூடியதுமாய்,
... மாதத்திற்குள் கொடுபடவேண்டும்.

... ஒவ்வொரு பொருட்களுக்கும் தனித்தனியே
சுதேச வைத்திய... பத்திரங்கள் அனுப்பவேண்டும்.
கொழும்பு
1959 ம் ஆண்டு ஏப்...

2. கேள்விப்பத்திரங்கள் மட்டக்களப்பு நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்விப்பத்திரங்களெல்லாம் இருபிரதியில் கையெழுத்திட்டு மூடி முத்திரையிட்டு பேராதனை கமத்தொழிற் பகுதி கோரிக்கைச்சபைத் தலைவருக்கு அட்டையில் இடதுபக்க மேல் மூலையில் " கிடுகு, செங்கல், இரட்டைமாட்டுக்கரத்தை, புளிமாம்பழங்கள் கொடுப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் " என்று எழுதி அனுப்ப வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் திகதியன்று பகல் 12 மணிவரையும் 10 ரூபாய் பணம்கட்டிய பற்றுச்சீட்டு காண்பிக்கப்பட்டதும் கொடுக்கப்படும். இந்தக் கட்டுப்பணம் ஏதாகிலும் ஒரு கச்சேரியில் அல்லது கொழும்பு திறைச்சேரியில் கட்டியிருக்க வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும் கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் கேள்விக்காரர்கள், அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் மூலம் மூடி முத்திரையிட்டு அட்டையில் " கிடுகு, செங்கல், இரட்டைமாட்டுக்கரத்தை, புளி மாம்பழம் கொடுப்பதற்கு கேள்விப் பத்திரம் " என்று எழுதி முழு விலாசத்துடன் பேராதனை கமத் தொழிற் பகுதியின் கோரிக்கைச் சபைத் தலைவர் அவர்களின் கந்தோரில் கொடுக்கவேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கேள்விப் பத்திரங்கட்கு ஒப்புக்கொண்ட பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரங்கள் திறக்கும் திகதி அனுப்பப்படும். எந்தக் கேள்விக்காரருக்காகிதல் ஒப்புக்கொண்ட பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரம் முடிவடையும் திகதியில் இருந்து நான்கு நாட்களுக்குள் கிடைக்காவிடில் அவர் உடனே பேராதனை கமத்தொழிற் பகுதியின் கோரிக்கைச் சபைத் தலைவர் அவர்களின் கந்தோருடன் தொடர்புகொள்ள வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விப்பத்திரகாரர்கள் விரும்பினுல் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரங்கள் மேற்குறிக்கப்பட்ட நேரத்திலும் திகதியிலும் பேராதனை கமத்தொழிற் பகுதியின் கோரிக்கைச் சபைத் தலைவர் அவர்களின் கந்தோரில் திறக்கப்படும்.

6. அங்கீகரிக்கப்படாத பத்திரங்களில் கேள்விப்பத்திரங்களும், அல்லது குறிக்கப்பட்ட நிபந்தனைக்குள் அடங்காதவையுமான கேள்விப் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்வி வீதங்களும், தொகைகளும், மையினுல் தெளிவாக எழுதப்பட வேண்டும். அத்துடன் திருத்தங்களெல்லாம் கேள்விக்காரரின் கையெழுத்துடன் இருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரகாரர் தங்களது முழு விலாசத்தையும் கேள்விப் பத்திரத்தில் எழுத வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் கமத்தொழிற் பகுதி அதிபதியுடன் ஒரு ஒப்பந்தம் எழுத வேண்டும். அத்துடன் கமத்தொழிற் பகுதி அதிபதியின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி வீதத்தில் முழுப் பெறுமதியில் ஐந்து வீதத்தை பிணைப்பணமாகக் கட்டவேண்டும். இப்பணம் ஒப்பந்தம் முழுதாக நிறைவேறிய பின் திருப்பிக்கொடுக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் வேலையைச் செய்து முடிக்காவிடில் அவரின் பிணைப்பணம் அரசாங்கத்திற்கு பறிமுதலாக்கப்பட்டு அவரின் பெயர் தவறு செய்த ஒப்பந்தக்காரர் இடாப்பில் பதிவு செய்யப்படும்.

9. ஒப்பந்தத்தில் ஒட்ட வேண்டிய முத்திரைச் செலவுகளை தெரிவு செய்த கேள்விப் பத்திரகாரர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

10. கேள்விப்பத்திரகாரர் தங்களது விண்ணப்பங்களை கேள்விப் பத்திரங்கள் முடிவுற்ற திகதியிலிருந்து மூன்று வாரங்கட்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

11. கமத் தொழிற் பகுதி அதிபதி மேற்கூறிய கேள்விப் பத்திரங்களை முழுதாகவோ அல்லது ஒரு பாகமாகவோ தள்ளுபடியாகச் செய்ய அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையைப் பின் உபயோகத்திற்கு நிறுத்தி வைத்துக்கொள்ள உரிமையுடையவராவர்.

12. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் மேலே குறிக்கப்பட்ட வேலைக்களை செய்ய இலங்கைப் பிரஜையான பணியாட்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். இலங்கைப் பிரஜையென்ருல் இலங்கையில் பிறப்பால் அல்லது பதிவால் பிரசாவுரிமை பெற்றவராவர்.

13. ஒப்பந்தகாரருக்கு அனுப்பப்பட வேண்டிய அறிக்கைகள் நேர்முகமாக அல்லது அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பப்பட்டால் அவருக்கு பரிமாறப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

14. ஒப்பந்தகாரர் அரசாங்கத்திற்கு எதிராக 1934 ம் ஆண்டு 19 ம் இலக்க வேலையாள் நட்ட ஈட்டுச் சட்டத்தின்படி எடுக்கும் எந்தவகையான உரிமைகளுக்கும் நட்ட உத்தரவாதம் பண்ணவேண்டும்.

15. ஒப்பந்தகாரர் வேலைக்கு நியமிக்கும் ஒரு வேலையாளைப்பற்றி தடைசெய்ய அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

16. தவறு செய்த ஒப்பந்தக்காரர் இடாப்பில் பதியப்பட்ட ஒப்பந்தகாரரோடு அல்லது எந்தக் காரணத்திற்காவது வேறு ஒருவருடன் கமத்தொழில் அதிபதி எந்தவகையான ஒப்பந்தமும் செய்துகொள்ள மாட்டார்.

17. இதுவிடயமாய் மேலும் தேவைப்பட்ட விபரங்களை மட்டக்களப்பு கமத்தொழில் நிர்வாக அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எப். சந்திரசெத்தினை,
கமத்தொழில் அதிபதி.

பேராதனை,
5.5.59.

---

## நீர்ப்பாசனத்துறை

**வைபர்க்ளாச் வத்தைகளும் (Fibreglas dinghies)**
**அவைகளின் உபகரணங்களும் கொள்ளல்**

கீழ்க்கண்ட பொருட்கள் கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 9 ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும், கொழும்பு த. பெ. இலக்கம் 500 ல் உள்ள காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) 14 இல. வத்தைகள்—வைபர்க்ளாச் (Dinghies-Fibreglas) ;

(ஆ) 1 இல. தொடர் வத்தை பாரவத்தைகளுக்கு (Trailer for Heavy Dinghies) ;

(இ) 1 இல. காற்றினால் உதைக்கும் வெளி மோட்டார் (Air driven out Board Motor) ;

2. நீர்ப்பாசன உப அதிபரின் (படம் வரைதல்) காரியாலயம், கொட்டா வீதி, கொழும்பு 5 என்ற செயலகத்தில் மேற்படி கொள்வனவுக்காய கேள்வித்தாள்கள் பார்வை செய்வதற்கென உண்டு. எந்தக் கச்சேரியிலேனும் அல்லது மேற்கூறிய அனுவலகத்திலேனும் ரூபா 25.00 கட்டுக்காசு கட்டிய இரசீது சமர்ப்பிக்கும் விண்ணப்பக்காரர்களுக்கு கேள்விப்பத்திரத் தாள்கள் கொடுக்கப்படும். மேற்கூறிய கட்டுக்காசு கேள்விப்பத்திர விதிகளுக்கு அமைய திருப்பிக் கொடுக்கப்படும்.

3. மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தாள்களிலேயே கேள்விகள் கேட்கப்படல் வேண்டும். 1959 ம் ஆண்டு ஜுன் மாதம் 5 தேதி வெள்ளிக்கிழமை வரைக்கும் கேள்வித்தாள்கள் கொடுக்கப்படும்.

ரீ. பீ. ஈ. செனிவிரத்தின,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத்துறை,
த. பெ. இல. 500,
கொழும்பு,
11.5.1959.

---

## நீர்ப்பாசனத்துறை

கொழும்பு கொட்டா ரோட்டைச் சேர்ந்த மேல் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர், " வெள்ளவத்தை வாய்க்கால் மோவாய் துறைமுகத்தை திருத்தவும் திடப்படுத்தவும் " கேள்விப்பத்திரங்களை இப்பகுதியில் ரூபா 8,000 க்கு அல்லது கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மெழுகு முத்திரை இடப்பெற்ற கேள்விப் பத்திரங்களை 5.6.59 வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

இதையிட்டு எல்லா விபரங்களும், படங்களும் அத்தோடு இதற்கு வேண்டிய கேள்விப்பத்திரங்களும் மேற்கூறிய காரியஸ்தரிடம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

நீர்ப்பாசன இலாகாவில் அல்லது கச்சேரியில் ரூபா 25.00 கட்டி பற்றுச்சீட்டு வைத்திருப்பவர்க்கும், பதிவு செய்யப்பட்டவரென அத்தாட்சிப் படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு 3.6.59 புதன்கிழமை பி.ப. 4.30 மணிவரை " கேள்விப்பத்திரங்கள் " வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை, நிராகரிக்க, அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அதிகாரம் அரசாங்கத்தின் பிரத்தியேக உரிமை.

ஜே. எச். கென்ஸ்மென்,
உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர்.

உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர்,
வேனுவனு ரோட்,
கொழும்பு 9.

---

## நீர்ப்பாய்ச்சல் இலாகா

மாத்தளைப் பகுதியினுள்ள நீர்ப்பாய்ச்சல் பொறியியலாளர் கந்தோரில் " மாத்தளை நீர்ப்பாய்ச்சல் காரியாலயம் " கட்டுவதற்கு கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு மே மாதம் 27 ந் திகதி காலை 10 மணி வரைக்கும் கண்டி நீர்ப்பாய்ச்சல் பொறியியலாளரின் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 13.5.59 ல் இருந்து 25.5.59 வரையும் இவ் விலாகாவில் 33,000 ரூபாவுக்கும் அதற்கு மேற்படவும் பதிவு செய்த ஒப்பந்தக்காரருக்கு மாத்தளை நீர்ப்பாய்ச்சல் இலாகாவில் வழங்கப்படும். மேலதிகமான விபரங்களை மாத்தளை நீர்ப்பாய்ச்சல் உப கந்தோரில் அறிந்துகொள்ளவும்.

சீ. துரைராசசிங்கம்,
எஸ். டீ. ஒ., மாத்தளை.

நீர்ப்பாய்ச்சல் இலாகா, மாத்தளை,
1959 ம் ஆண்டு மே மீ 8 ந் வ.

---

## நீர்ப்பாசன இலாகா

வட பகுதி வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இஞ்ஞினியரால் கீழ்க்காணும் வேலைகளுக்காகிய விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வருடத்திய ஜூன் மாதம் 2 ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரையும் நீர்ப்பாசன இலாகாவில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்கு எதிராக எழுதப்பட்டிருக்குந் தொகைகளுக்குமதற்கு மேற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் :—

| வேலையின் பெயர். | பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் தொகை ரூ. ச. | கேள்விப்பத்திரத்திற்குரிய கட்டுப்பணம் ரூ. ச. | இலாகாவால் இனமாய் கொடுக்கப்படும் வேலைகட்காகிய பொருட்கள் |
|---|---|---|---|
| முகத்தான் குளத்தண்டையில் :— | | | |
| (1) தற்காலிக நிரந்தர ஓவசியருக்காகிய வீடு அமைத்தல் .. | 7,900 0 .. | 25 0 .. | வேலைக்காகிய சீமெந்து மாத்திரம் |
| (2) இவ்விலாகா இன்ஸ்பெக்டருக்காகிய தற்காலிகநிரந்தர வீடு அமைத்தல் | 8,750 0 .. | 25 0 .. | ஷை |
| (3) முகத்தான் குளக்கட்டிற்கு அலைகற்கள் அடுக்குதலும் வடிகட்டு வேலைகள் செய்தலும் | 33,200 0 .. | 50 0 .. | ஒன்றுங் கொடுக்கப்படமாட்டாது |

2. விண்ணப்பப் பத்திரங்கள், இவ்வருட ஜூன் மாதம் 1 ந் தேதிவரையும் வவுனியாப் பகுதி நீர்ப்பாசன இஞ்ஞினீயரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஏனைய விபரங்கட்கு மேற்படிகாரியாலயத்திற்கு நேர்முகமாகவோ அல்லது மனுச்செய்தோ கோரவும்.

(3) தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவசமிருப்பின், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அவ்வேலைகள் திருப்திகரமாகச் செய்யப்படுகிறதென்றும், அத்துடன் வேலைகளின் பெயரும் தொகையும் குறிக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் மேற்கூறிய வேலைகட்கு விண்ணப்பிக்கும்பொழுது சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடாத வேலைகளெதுவும் கைவசமில்லை யென்றும் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

வவுனியாப் பகுதி,
1959 ம் ஆண்டு ஏப்ரில்மீ 25 ந் வ.

வீ. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன இஞ்ஜினீயர்.

## நீர்ப்பாய்ச்சல் இலாகா

ஊவா மாகாணத்தில் யுதகனுவில் உள்ள திட்டத்தின் வேலையாளின் இரட்டை வீடு ஒன்று கட்டுவதற்கு இவ்விலாகாவில் ரூபா 12,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவுசெய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து பண்டாரவளை மத்திய பகுதி நீர்ப்பாசன அதிகாரி 27.5.59, புதன்கிழமை, காலை 10 மணிவரை ரெண்டர் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

விபரங்களும் ரெண்டர் பத்திரங்களும் மொனருகலை நீர்ப்பாசனக் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மொனராகலை சிறுபகுதி உத்தியோகஸ்தர்.

## தபால் தந்திப் பகுதி

**உபயோகிக்க முடியாத பொருட்களையும், மோட்டார் வாகனங்களையும் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்**

உபயோகிக்கமுடியாத பொருட்களையும், ஏழு மோட்டார் வாகனங்களையும் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் தெலிபோன் தந்திப் பிரதான இஞ்சினியரால், 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 16 ந் திகதி முற்பகல் 9.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

முழு விபரங்களுக்கு இதே வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பகுதி (சிங்கள விளம்பரங்கள்) யைப் பார்க்கவும்.

எச். ஈ. செனவிரத்ன,
தபாற் கந்தோர் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர், கொழும்பு 1,
1959 ம் ஞூ மே மீ 8 ந் உ.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 21 ந் திகதி வியாழக்கிழமையும், 22 ந் திகதி வெள்ளிக்கிழமையும் அரசாங்க விடுமுறை நாட்களாதலால், இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை 1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 20 ந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 16 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஞூ வைகாசி (மே) மீ 5 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.